செ.கு.எண்: 53 நாள்: 7.6.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை - 7.6.2011

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், பாலியார் கிராமம், புதுக்காடு என்ற இடத்தில் திரு. லட்சுமணன் என்பவரின் மகன் திரு. சிவலிங்கம் 4.6.2011 அன்று காட்டு யானை தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து மிகவும் துயருற்றேன்.

திரு சிவலிங்கத்தை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளதுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும் ஒரு லட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9